بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/10/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் போர் தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையின் சில அம்சங்கள் பற்றிய எடுத்துரைப்பு, பனூ கைனுகா போரின் விபரங்கள் மற்றும் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரை முன்னிறுத்தி துஆவிற்கான தொடர்ச்சியான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அறிவிப்புகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் மகள் மற்றும் மருமகனுக்குத் தஹஜ்ஜுத் தொழுகையின் பால் கவனமூட்டியது பற்றி புகாரியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:-

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருநாள் ஹுஸூர் (ஸல்) அவர்கள் இவர்களுடைய மற்றும் ஃபாத்திமா (ரலி) அவர்களுடைய இல்லத்திற்கு வருகை தந்தார்கள். 'நீங்கள் எல்லாம் தஹஜ்ஜுத் தொழுகை தொழுவதில்லையா?' என்று வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், 'எங்களுடைய உயிர்கள் அல்லாஹ்வின் கையில் உள்ளன. அவன் நாடும் போது எங்களை எழுப்புகிறான்' என்று பதில் அளித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த பதிலும் அளிக்கவில்லை. திரும்பிச் சென்று விட்டார்கள். திரும்பிச் செல்லும் போது, 'மனிதன் எல்லாரையும் விட அதிகம் விவாதிக்கக்கூடியவன் ஆவான்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு விவாதம் போன்ற, ஏட்டிக்குப் போட்டியாக பேசும் தோரணையாகத் தென்படக்கூடிய அப்படிப்பட்ட பதிலை அளித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கோபித்துக் கொள்ளவோ அல்லது அதிருப்தியை வெளிப்படுத்துவற்கோ பதிலாக, எந்த அளவு உன்னதமான வழிமுறையை மேற்கொண்டார்கள் என்றால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது வாழ்வின் இறுதிவரை அதன் இனிமையிலிருந்து

இன்பமடைந்து கொண்டே இருந்திருப்பார்கள். அவர்கள் எந்த இன்பத்தைப் பெற்றிருப்பார்களோ அது அவர்களுக்கே உரித்தானதாகும்.

இப்பொழுதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்த விருப்பமின்மையை அறிந்து கொண்டு, நுணுக்கமாகப் பார்க்கும் ஒவ்வொருவரும் வியப்பில் ஆழ்ந்து விடுகிறார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உண்மையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த அளவு கூறிவிட்ட அந்த விஷயமே தனக்குள் எப்படிப்பட்ட பலன்களைக் கொண்டிருந்தது என்றால், அதில் பத்தில் ஒரு பங்கு கூட வேறு ஒருவரின் நூறு விவாதங்களாலும் சென்றடைந்திருக்க முடியாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த நபிமொழியில் இருந்து நமக்குப் பல விஷயங்கள் தெரிய வருகின்றன. அவற்றின் மூலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் பற்றி தெரிய வருகிறது. இந்த இடத்திலேயே அவற்றைப் பற்றி கூறிவிடுவது பொருத்தமாகத் தெரிகிறது.

முதலாவதாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மார்க்க விஷயம் பற்றிய கவலை எந்த அளவு இருந்தது என்றால், இரவு நேரத்தில் சுற்றிவந்து தம்முடைய அன்பர்களைக் கவனித்துக் கொள்வார்கள். பல மக்கள் தாங்கள் நல்லவர்களாக இருப்பார்கள். மக்களுக்கும் நன்மையைப் போதிப்பார்கள். ஆனால், அவர்களது வீட்டு நிலை மோசமானதாக இருக்கும்.

அன்பர்களுக்குத் தர்பிய்யத் வழங்குவது எப்படிப்பட்ட ஓர் உயர்தரமான நற்பண்பு என்றால், அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இருந்திருக்காவிடின், அன்னாரது நல்லொழுக்கங்களில் ஒரு விலைமதிப்பற்ற பொருள் விடுபட்டிருக்கும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயர் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றிருந்தார்கள். எனவே, இந்த நற்பண்பும் அன்னாரிடம் மிகவும் அதிகமாக இருந்தது.

இரண்டாவது விஷயமாகத் தெரிவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாம் உலகிற்கு முன் எடுத்து வைக்கும் இந்தப் போதனை மீது அன்னாருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. நடுஇரவில் எழுந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செல்வதும், தம் மகளுக்கும் மருமகனுக்கும் அவர்கள் இருவரும் தஹஜ்ஜுத் தொழுகையையும் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாம் மக்களை செயல்பட வைக்க விரும்பிய அந்தப் போதனை மீது, அன்னாருக்கு இருந்த முழுமையான நம்பிக்கையை எடுத்துரைக்கிறது.

இல்லையென்றால், ஒரு போதனை படி செயல்படுவதும் செயல்படாமல் இருப்பதும் சமமானதே என்பதை அறிந்துள்ள இட்டுக்கட்டும் ஒரு மனிதன் தன் சந்ததிகளுக்கு இத்தகைய இரகசியமான நேரத்தில் அந்தப் போதனை படி செயல்படுமாறு அறிவுறுத்த முடியாது.

மூன்றாவது விஷயம் - இதை நிரூபிப்பதற்காகத்தான் இந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் புரிய வைப்பதற்காக பொறுமையாக செயல்பட்டு வந்தார்கள். சண்டையிடுவதற்குப் பதிலாக அன்பு, நேசத்தோடு ஒருவருக்கு அவருடைய தவறைப் பற்றி புரிய வைப்பார்கள்.

எனவே, ஹஸ்ரத் அலீ (கர்ரமல்லாஹு வஜ்ஹஹு) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பிறகு ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகைக்கு விடுமுறை விட்டதில்லை.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

தஹஜ்ஜுத் தொழுகை தொடர்பாக இந்த சம்பவத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். குறிப்பாக, முரப்பிமார்கள், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இரவின் துஆக்கள்தான் அல்லாஹ்வின் அருள்களை அதிகம் ஈர்க்கின்றன. இன்றைய நாள்களிலோ உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக இவற்றின் தேவை அதிகம் உள்ளது.

இதற்குப் பிறகுள்ள சம்பவங்களில் பனூ கைனுகா போர் பற்றி வருகிறது. இந்தப் போர் ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு நடைபெற்றது. இஸ்லாத்தின் வருகையால் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய இரு கோத்திரங்களும் பழைய பகைகளை முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டு ஒன்றாகி விட்டன. எனவே, இது யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. யூதர்கள் பல்வேறு சதித்திட்டங்கள் மூலமாக அவர்களை மீண்டும் ஒருவர் மற்றவருக்கு எதிராகத் தூண்டி விட முயற்சி செய்தார்கள்.

இது போன்றே ஒரு சந்தர்ப்பத்தில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய கோத்திரத்து மக்கள் மத்தியில் வாக்குவாதம் எந்த அளவுக்கு அதிகரித்து விட்டது என்றால், போருக்கு ஆயத்தம் மேற்கொள்ளும் அளவுக்கு விஷயம் சென்று விட்டது.

பத்ர் யுத்தத்தில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். அப்போது யூதர்களின் கலகம் அம்பலமானது. யூதர்களில் எல்லாருக்கும் முதலாவதாக உடன்படிக்கையை மீறிய கோத்திரத்தினர் பனூ கைனுகா ஆவார்கள். பனூ கைனுகாவின் விஷமத்தனங்கள் தொடர்பாக இந்த ஒரு சம்பவமும் கிடைக்கிறது:

ஒரு முஸ்லிம் பெண்மணி ஒருமுறை பனூ கைனுகாவின் சந்தைக்குச் சென்றார். அங்கு சில தீய நடத்தையுள்ள மனிதர்கள் அவருக்குத் தொல்லை கொடுத்தார்கள். மேலும், எப்படிப்பட்ட மோசமான செயலை செய்தார்கள் என்றால், அந்த அப்பாவிப் பெண் ஆடையற்று போனார். அருகிலேயே ஒரு முஸ்லிம் நபர் கடந்து சென்று கொண்டிருந்தார். அவர் இந்தக் காட்சியைக் கண்ட போது, அவர் தாக்குதல் தொடுத்து ஒரு தீய யூதனைக் கொன்று விட்டார். இதனால் மற்ற யூதர்கள் அந்த முஸ்லிம் மீது பாய்ந்து அவரைக் கொன்று விட்டனர்.

இந்த செய்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எட்டிய போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யூதர்களுக்குப் புரிய வைப்பதற்கு மிகவும் முயற்சி செய்தார்கள். ஆனால், புரிவதற்குப் பதிலாக அவர்கள் முஸ்லிம்களுக்கு பகிரங்கமாக மிரட்டல் விடுக்க ஆரம்பித்து விட்டனர். இதற்குப் பிறகு, யூதர்கள் அங்கிருந்து சென்று கோட்டைக்குள் அடைபட்டுக் கொண்டனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். பனூ கைனுகாவை 15 நாள்கள் வரை முற்றுகையில் வைக்கப்பட்டது. இந்த முற்றுகையால் நொந்து போன யூதர்கள் மதீனாவிலிருந்து நாடுகடத்தப்பட்டவர்களாக நிரந்தரமாக சென்று விடுவதற்கான கோரிக்கை வைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யூதர்களின் இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டார்கள். பனூ கைனுகாவுக்கு மதீனாவிலிருந்து சென்று விடுவதற்கான ஆணை பிறப்பித்தார்கள்.

பனூ கைனுகா போரின் வரலாறு தொடர்பாக ஓரளவு கருத்து வேறுபாடு உள்ளது. வாக்தீ மற்றும் இப்னு சஃது ஆகியோர் ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் என்று கூறியுள்ளார்கள். இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோர் இதனை சவீக் போருக்குப் பிறகுள்ளதாக வைத்துள்ளார்கள். அது ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஸில் ஹஜ்ஜாஹ் மாதம் நடைபெற்றதாக (அனைவராலும்) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஹதீஸின் ஓர் அறிவிப்பில் இதுவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: பனூ கைனுகா போர் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமண வழியனுப்புதலுக்குப் பிறகு நடைபெற்றது.

*குத்பாவின் இறுதியில் இந்தத் தொடர் இனியும் தொடரும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக மீண்டும் ஒருமுறை துஆவிற்காக வலியுறுத்தியவாறு கூறினார்கள்:*

ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போர் மற்றும் அதன் விளைவாக பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவி பாலஸ்தீனர்களின் உயிர்த்தியாகங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. போர் நிலைமைகள் எந்த அளவு வேகமாக கடுமையாகின்றனவோ, இஸ்ரேல் அரசும் வல்லரசுகளும் எந்தத் திட்டத்தின்படி செயல்படுகின்றனவோ அதனால் உலகப் போர் இப்பொழுது கண்ணுக்கு முன்னால் தென்படுகிறது.

சில இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள், ரஷ்யா, சீனா மற்றும் சில மேற்கத்திய ஆய்வாளர்களோ இப்பொழுது இதை வெளிப்படையாகக் கூறவும், எழுதவும் ஆரம்பித்து விட்டார்கள். அதாவது, இந்தப் போரின் வட்டம் இப்பொழுது விரிவடைவதாகத் தெரிகிறது. உடனடியாக போர் நிறுத்த திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்றால், உலகம் அழிந்து விடும்.

அனைத்தும் செய்திகளில் வருகிறது. முழு சூழ்நிலையும் உங்கள் அனைவருக்கும் முன்னால் உள்ளது. **எனவே, அஹ்மதிகள் துஆக்களின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். Relax ஆகி (நிம்மதியாக இருந்து) விடாதீர்கள். ஒவ்வொரு தொழுகையிலும் ஒரு சஜ்தா அல்லது குறைந்த பட்சம் ஏதாவது ஒரு தொழுகையில் ஒரு சஜ்தாவைக் கண்டிப்பாக இதற்காக செய்ய வேண்டும். அதில் துஆ செய்ய வேண்டும்.** மேற்கத்திய நாடுகளின் அல்லது எந்த நாட்டின் தலைவராக இருந்தாலும் அவர் இந்த விஷயத்தில் நீதியுடன் செயல்பட விரும்புவதில்லை.

**எந்த நாட்டின் தலைவர் நல்லவர் அல்லது நல்லவர் இல்லை என்ற விவாதங்களில் அஹ்மதிகள் ஈடுபட வேண்டாம்.** ஒருவர் துணிச்சலுடன் போரை நிறுத்த முயற்சி செய்யாத வரை அவர் உலகை அழிவின் பக்கம் அழைத்துச் செல்வதற்கான பொறுப்பாளியாவார். எனவே, உங்களது சூழலில் அநீதியை நிறுத்துங்கள் என்ற விஷயத்தை துஆக்களுடன் பரப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். **ஓர் அஹ்மதிக்கு யாருடனாவது தொடர்புகள் உள்ளன என்றால், அவர்களுக்குப் புரிய வையுங்கள்.**

இஸ்ரேலியர்கள் கூறுகிறார்கள்: ஹமாஸ் எங்களுடைய அப்பாவி குடிமக்களைக் கொன்றது. எனவே, நாங்கள் அதற்காகப் பழிவாங்குவோம்.

ஆனால், இந்தப் பழிவாங்குதல் இப்பொழுது எல்லா எல்லைகளையும் கடந்து விட்டது. இஸ்ரேலியர்களின் உயிரிழப்புகள் எந்த அளவுக்கு எடுத்துக் கூறப்படுகின்றனவோ அதற்கு நேர் எதிராக அதைவிட நான்கு, ஐந்து மடங்கு அதிகம் பாலஸ்தீனத்தின் அப்பாவிகளின் உயிரிழப்பு ஏற்பட்டு விட்டது.

ஹமாஸை அழிப்பதுதான் இலக்கு என்றால், அவர்களுடன் நேருக்கு நேர் போர் செய்ய வேண்டும். பெண்களையும் குழந்தைகளையும் ஏன் இலக்காக்குகிறார்கள்? இவ்வாறே தண்ணீர், உணவு மற்றும் மருத்துவம் ஆகியவற்றை விட்டும் விலக்கி வைத்துள்ளார்கள்.

மனித உரிமைகள் (நிலைநாட்டப்பட வேண்டும்) மற்றும் போர் கோட்பாடுகள் (கடைபிடிக்கப்பட வேண்டும்) என இந்த அரசாங்கங்கள் புரியும் எல்லா வாதங்களும் இங்கு வந்து நிறைவடைந்து விடுகின்றன. எனினும், சில மக்கள் இதன்பால் கவனமூட்டுகிறார்கள். உதாரணமாக, அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கடந்த நாள்களில் இவ்வாறு கூறினார்: 'போர் செய்ய வேண்டும் என்றால், போர் கோட்பாடுகளை முன்னிறுத்த வேண்டும். அப்பாவி குடிமக்கள் மீது அநீதியிழைக்கக்கூடாது.' ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரும் கூறினார்.

இதனால் இஸ்ரேல் அரசாங்கம் கூச்சலிட்டது. அப்பொழுது பெரும் அமைதி சாம்பியன்களாகத் தம்மை கருதிக் கொள்ளும் உலக ஆற்றல்களின் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஆதரவாக எதுவும் கூறவில்லை. மாறாக, விருப்பமின்மையை வெளிப்படுத்தினார்கள். எவ்வாறு இருப்பினும், நிலைமைகள் மோசமாக இருக்கின்றன. மோசமாகிக் கொண்டே செல்கின்றன.

மேற்கத்திய ஊடகம் ஒரு பக்கத்தின் செய்திகளை மிகைப்படுத்திக் கூறுகிறது. மறுபக்கத்தின் செய்திகளை ஓர் ஓரத்தில் சிறிய செய்தியாகத் தருகிறது. உதாரணமாக, கடந்த நாள்களில் விடுதலையடைந்த ஒரு பெண் சிறையில் நான் நல்ல முறையில் நடத்தப்பட்டேன் என்று கூறினார். அப்பொழுது அந்தச் செய்தி ஒரு மூலைக்குச் சென்று விட்டது. ஆனால், ஹமாஸ் உடைய சிறைவாசம் ஒரு நரகமாக இருந்தது என்ற அறிக்கையை நிரந்தரமாக பெரிய செய்தியாக ஆக்கி முன்வைக்கப்படுகிறது.

எல்லா சூழ்நிலையையும் முன்னால் வைத்து விட்டு, உலகத்தைத் தன்னுடைய முடிவை எடுக்க விடுவதுதான் நீதியாகும். எனவே, இந்த சூழ்நிலையில் நாம் துஆக்களின் பக்கம் அதிகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

நாம் நம்முடைய வட்டத்தில் துஆவுடன் முயற்சியும் செய்ய வேண்டும். அநீதிக்குள்ளாக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்காக துஆ செய்யுங்கள். முஸ்லிம் அரசாங்கங்கள் தரப்பிலிருந்து அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நீண்ட காலத்திற்கான திட்டம் வகுப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். முஸ்லிம்களின் துன்பங்கள் விலகுவதற்காக நாம் ஒரு சிறப்பான வேதனையை உணர வேண்டும். நாமோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாவோம். இவர்களால் எங்களுக்குத் துன்பம் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பாரஸீக கவிதையில் தம்முடைய உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்:

“அவர்கள் எம் தூதரை நேசிப்பதாகத் தானே வாதம் புரிகிறார்கள்!

(எனவே) உள்ளமே! நீ அவர்களைக் கவனத்தில் கொள்வாயாக!”

எனவே, (நாம்) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிப்பதன் எதிர்பார்ப்பாவது, நாம் முஸ்லிம்களுக்காக குறிப்பாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)